புதினபட்டத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்ற

ஸ்தாபிதம் (1889)

இந்துசாதனம்.

THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

பத்திரக் கிரயம்.

யாழ்ப்பாணப் பட்டினம்: ஷு 1-க்கு		ரூ. 5-60
வெளியூர், இந்தியா:	,,	ரூ. 9-40
தொடுவாய்ப்பகுதி:	,,	ரூ. 9-40
தனிப்பிரதி:		சதம் 6

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

விளம்பர விகிதம்.

முதன் முறைக்கு:—ஒருகலம்		ரூ. 9-40
,,	அரைக்கலம்	ரூ. 5-00
,,	கால்கலம்	ரூ. 3-15
,,	ஒரு அங்குலம்	சதம் 65

அடுத்த முறைகட்கு ஷை விகிதங்களிற் பாதி.

விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—கூஎ } யாழ்ப்பாணம்:—குரோதனஷு ஐப்பசிமீ க0உ; (1925 அக்டோபர் 26) திங்கட்கிழமை. { இலக்கம்—கூஉ

உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதமபூத்தவிநாயகன்றாள் வணங்கிவாழ்வாம்'

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

இனும் காலண்டர் இனும்.

எங்களிடம் கட்டி வெள்ளியிலும் 1-ம் தெ. 2-ம் தெ. வெள்ளியிலும் மிச்சம் தப்புரவாக வேலைமுடித்த முரசுகுத்தி செங்காதரக்கொடி கைகோர்வை,முகப்புக்கொடி,காஞ்சி அரைஞாண்கொடி, கால்தண்டை, கொலுசு,வகைகளும் கடயம் கங்கணம், மயிர்மாட்டி, ஒட்டியாணமும், இமிடேசன் செசப்பு கம்மல் தோடு கடுக்கன் மோதிரங்கள் இன்னும் இதரவெள்ளி தங்க நகைகளும் பட்டுபருத்திமுதலிய ஜவுளித் திணுசுகளும் விலைகள் சகாயம். விலாசம் தெரிவித்தால் பிரைஸ்லிஸ்டு அனுப்புகிறோம். சுபம்.

தொ. வெ. சென்னிசெட்டி &சன்ஸ்
சராப். ஜவுளி வியாபாரம்
குகை, சேலம்,
தென்-இந்தியா.

(H. 41.)

இனும்! காலண்டர் இனும்!!

எங்கள் கம்பெனியில் கட்டி வெள்ளிச் சாமான்களும், தெ. 1-ம், தெ. 2-ம் வெள்ளியாலும் மிச்சம் துப்புரவாக வேலைசெய்த முரசு குத்தி செங்காதரக் கொடி, கைக் கோர்வை முகப்புக் கொடி, காஞ்சிக் கொடி, கால் தண்டை, செயின்கொலுசு, இன்னும் காலிற் போடும் சாமான்களும், மயிர்மாட்டி, கடயம், ஒட்டியாணம் மோதிரம்,புதுச்சிகப்புக் கம்மல், தோடு, கடுக்கன், சிமை வயிரக்கம்பி சட்டங்கள், ஜவுளி பட்டும் பருத்தியும் கலந்த சேலை, சோமன், இன்னும் வேண்டிய சாமான்களும் இருக்கின்றன. தாங்கள் விலாசம் தெரிவித்தால் கிரயஜாபிதா அனுப்புகிறோம்.

நா. பிளே செட்டி அன கோ.,
சரூப் ஜவுளி வியாபரம்,
குகை, சேலம்,
தென் இந்தியா.

(H. 39.)

வீ. ஸாமி. அய்யங்காருடைய

அறைக்கீரை விதைத் தைலம்.



பித்த மேகசீரானது சிரசுக்கேற அதனுற் கண்மறைப்பு, கண்ணெரிச்சல், கண்புகைச்சல், கண்ணிலிருந்து நீர்வடிதல், ஒருதலைவலி, இருதலைவலி, பீனிசம், காதினுல் சீழ்வடிதல், காது இரைச்சல், காதுவலி, ஐந்துவருஷத்திற்குட் பட்டதாயும் இரைச்சலோடு கூடிய காதடைப்பு, சாப்பன், தேமல், சிரசில் மயிர் உதிர்தல், கொண்டுவிழுதல் முதலான ரோகங்களை நிவர்த்திப்பதுமன்றி மயிரை நன்றாய் வளரச்செய்யும். இந்த நோட்டீசில் காணப்படாத கழுத்திற்குமேற்பட்ட சகல வியாதிகளையும் அனுகூலப் படுத்தும், மேற்கண்ட வியாதியில்லாதவர்கள் தேய்த்து ஸ்நானம்பண்ணினுல் தேகத்திற்குக் குளிர்ச்சியையும் ஆரோக்கியத்தையும் கொடுக்கும். வாரத்திற்கு இரண்டுதடவை காலை 8 மணிக்குள் வெந்நீரில் சீயக்காய்தேய்த்து ஸ்நானஞ்செய்து யாதொரு பத்தியமுமின்றி உடனே போஜனஞ் செய்து கொள்ளவேண்டும் 8 நாள்வரையிலும் சுசந்தம் மாறுது அன்று பகலில் மாத்திரம் தூங்கக் கூடாது. 10 பலங்கொண்ட புட்டி 1-க்கு கிரயம் ரூபா 1—10—0. 'பாக்கிங்போஸ்டேஜ் சார்ஜு பிரத்தியேகம்'

'விற்பனைக்கு தமிழ்நன் ஏஜன்டுகள் தேவை விபரம் எழுதிக்கேட்கவும்.'

ஐம்பகத்தம்மாள்,
8 நம். பிராடீஸ் ரோட்
மைலாப்பூர், சென்னை.

(Q. 67.)

சுரத்தை நீக்கும் அற்புதமான மருந்து.

குளிர் (குலைப்பன்) காய்ச்சல் முதலிய சகல விதமான சுரங்களையும் டக்ரர் மைக்கோயின் "சுரசங்காரி" ஔஷதம் உடனே மாற்றிவிடும். டக்ரர் மைக்கோயின் சுரசங்காரி யென்னும் மருந்து எவ்வகைச்சுரத்தையும் மந்திரவசத்தால் மாற்றுவதுபோல உடனே மாற்றிவிடுகின்றது. மற்றும் வைத்தியர்களினுல் மாற்றமுடியாத நெடுநாட்பட்ட எவ்வகைச்சுரமும் இந்த மருந்தில் நாலு மூன்று போத்தலை உபயோகிப்பதனுல் முற்றாக மாறிவிடுகின்றது. ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள். ஒருபோத்தல் கொண்ட மருந்தின்விலை ரூபா 1 சதம் 50. இம் மருந்து கொழும்பு கார்ஜில்ஸ் (Cargills Ltd.) கம்பனியிலும் மற்றும் மருந்துச்சாலைகளிலும் பெறற்பாலது.

(Y. 47.)

சாலாமிஸ்திரி லேகியம்

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனுல் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனுலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதானு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம்' சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது,

இதனுல் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள், பால் விருத்தியாகும்.

இந்தலேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரைருத்தலுக்கு ரூபா க0. கால் ருத்தலுக்கு ரூபா டு தாபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததினு முன் மணி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதாரவைத்தியசாலை,
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு,
இலோன்.

(M. 36.)

ESTABLISHED, 1909.

MESSRS. A. S. M. A. KHADER BROTHERS
Kairul Muslimeen Medical Hall
PORTONOVO (*South Arcot Dt; India.*)

இந்த விளம்பரம்முழுதும் தாங்களும் வாசித்து தங்கள் சிநேகிதர்களுக்கும் வாசிக்கக்காண்பியுங்கள். குளிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொள்வது போல் வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்.

நண்பிற்குகந்த அன்பர்காள்! நமது கம்பெனி ஸ்தாபித்த 1909-வது வருடமுதல் நாளது தேதிவரையில் கீழ் காணப்பட்ட லேகியத்தைச் செய்து இந்தியா, பர்மா, சிலோன், மலாய முதலிய தேசவாசர்களுக் கனுப்பி ஒவ்வொரு மஹான்களாலும் பிரபுக்களாலும் பிரயோகித்து நோயற்ற வாழ்வென்னும் பாக்கியத்தை குறைவற்ற செல்வமாயடைந்து ஒவ்வொரு கனவான்களாலும் நமக்கு யோக்கிய நற்சாக்ஷிகளும் அனந்த பரிசுகளும் பெற்றுவருவது நேயர்கள் அறிந்த விஷயமேயாம். தற்கால நிலைமைக்கேற்றப்போல் அனந்த பொய்வசனங்களை விடுத்து புதிது புதிதாக இத்தகைப்போன்ற குருவிலேகிய மென ஓர் நாமஞ் சூட்டி பத்திரிகை நோட்டீஸ் மூலமாய் வெளியிட்டிருக்கும் போலி மருந்துகளை நம்பிக் கையாண்டு பொருள் நஷ்டமும், மனக்கஷ்டமுங் கொள்ளாது நீடியகாலத்து அனுபவ முத்திபெற்ற உண்மையான மருந்துகளை பூர்வமுடைய யோகவான்கள் உணர்ந்து தருவித்து அருந்தவீர்களாக.

இதுவே அசல் பாகமுள்ளது! ஒருவருமிகழ்ந்து பேசாதது!!

உத்திரவாதமுள்ள

சித்தஜானந்த சிட்டுக்குருவி லேகியம்.

இச்சிறந்த இராஜ ஔஷத லேகியமானது முற்காலத்து மன்னர்களால் உபயோகித்துப் பிரசன்னமாய்ப் புகழ்ப் பெற்று வீரியசக்திக் குறையாது இல்லறத்தின் இன்ப வாழ்க்கையையடைந்து புத்திர பௌத்திர சம்பன்னராய் நீடூழிவாழும் பொருட்டே நமது முன்னோர்களால் கூறப்பட்ட பழைய ஏட்டுப்பிரதிகளிலுள்ள ஔஷத பாகங்களிற் சிறந்ததும், சோர்வில்லாத தைரியத்தை உண்டாக்கக் கூடியதுமான ஒப்பற்ற ஓர் புருஷ சஞ்சீவியாகின்றது. இச்சிறந்த அபூர்வ குண லேகியத்தின் ஆச்சரிய குணத்தை உடனுக்குடன் அறியவேண்டியதென்றே ஜனனுகூல நன்மைக்காகவே இதனை மிகவுங் குறைந்த விலைக்கு வெளியிட்டிருக்கின்றோம். மற்ற விவரங்களை நமது கேட்லாக்கில் காணலாம்.

ஷை லேகியத்தின் முக்கிய குணமாவது.

வாதபித்த சிலேத்ம பிருகிக் குறைவால் ஏற்படும் இரத்தக் குறைவு எழுவகை தாதுக்களின் பலஹீனம் அஸ்தி, வெட்டைச்சூடு, பிரமேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீர்சுருக்கு, நீர்எரிச்சல், நீராகார பெருத்தல் ஆகிய நோய்களையும் நித்திரையில் அடிக்கடி உண்டாகும் தாது நஷ்டம், சித்திரா பங்கம், Spermatorrhea, தேகமெலிவு, சதா இடுப்புவலி, கைகாலசதி, மலச்சிக்கல், பசி மந்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஓடித்திரியும் பலவித வாய்வுகள், நெஞ்சுவலி Nervous-diseases ஆகிய நோய்களைச் சுகப்படுத்தி இரத்தத்தைச் சுத்தி செய்து புதிய மேனியுடன் இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களைப் பெறுவதில் இதைவிட சிறந்த மருந்து கிடைப்பது அரிதினுமரிது.

40 நாள் சாப்பிடும் பெரிய டப்பி 1-க்கு விலை ரூ. 8—0—0
20 நாள் சப்பிடும் சிறிய டப்பி 1-க்கு விலை ரூ 4—0—0

வி. பி. தபால் சார்ஜு பிரத்தியேகம் முற்பணமனுப்பினுல் வி-பி. செலவு இனுமாயனுப்பப்படும். பினங்கு, சிங்கப்பூர், மலாக்கா, கோலாலம்பூர், கிள்ளான் முதலிய Straits Settlements வாசர்களும் Federated Malay States வாசர்களும், மருநதின் கிரயமும் தபால் செலவு ரூ. 2-ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். ஷை ஊர்களுக்கு திண்ணமாய் வி. பி, யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமானது சிட்டுக்குருவியின் கிருதம் அதாவது ஷை குருவியின் சத்தால் செய்யப்படவில்லை யென்றுவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டதால் குணமொன்றுஞ் செய்யவில்லை யென்றுவது அல்லது சில போலியர்கள் ஆயிரக்கணக்கான ரூபாய்களை சபதங்கள் கூறி கொண்டு பத்திரிகை வாயிலாய் வெளிவந்த இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரிய குண முண்டென்றுவது அல்லது இந்த அபூர்வ குண லேகியத்தைச் செய்து காட்டினுலாவது, கடவுளுக்குப் பொதுவாய் சத்தியமாய் ரூபிப்பவர்களுக்கு அவர்களால் கூறிய சபதங்களின் தொகையும், நமது கம்பெனியால் ரூ. 1000 இனுமாயும் சேர்த்துக் கொடுக்கப்படும. அப்படியே ரூபித்தும் இனுமுடைய பணத்தைக்கொடுக்கத்தவறினுல் கோர்ட்டு மூலமாகவுருல் செய்துக்கொள்ளலாம். ஆர்டர்செய்யும் நேயர்கள் இப்பத்திரிகையின் பெயரைக் குறிப்பிட்டெழுதவும்.

என் மேல்விலாசம்:—

Tel. Address:—
Kader Brothers
PORTO-NOVO

மெஸ்லர்ஸ ஏ. எஸ். எம். ஏ. காதர் பிறதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை,
தென்னுற்காடு ஜில்லா.

(Y. 38.)

அஷ்டபந்தனமருந்து.

இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்ட சுத்தமான சாக்குகளைக் கொண்டு செம்மையாகச் செய்யப்பட்ட (சுவாமிக்குச் சாத்தும்) அஷ்டபந்தனமருந்து எம்மிடத்தில் விலைக்கிருக்கிறது.

ருத்தல் ஒன்றின் விலை ரூபா 5.

ச. வைத்தியநாதக்குருக்கள்,
சிவன்கோவில்,
வண்ணுர்பண்ணை.

(M. 37)

சமையல் சௌக்கியம்.

இந்தியாவிலும் வெளிநாட்டிலும் புகழ்பெற்று விளங்கும்.

ருக்குமணி குக்கர்.

சமையல் அடுக்கை உபயோகிப்பவர்களுக்கே உண்டு முதல் 8 பேர்களுக்கு ஒரு மணிநேரத்தில் சொற்ப செலவில், தொந்தரவேயில்லாமல் சாதம் 5 கறிவகைகள் சமைக்கும். தனித்தவர்களுக்கும் குடும்பிகளுக்கும் வீட்டிலும் பிரயாணத்திலும் உபயோகம்.

1, 2, 4, 6, 8, பேருக்குரியது ரூபா 13, 18, 22, 27, 33 ல் கிடைக்கும். தபாற்கூலி வேறு. விபரப் புத்தகம் இனும். ஏசண்டுகள் தேவை. உடனே எழுதுக.

ருக்குமணி குக்கர் கம்பெனி,
இராயப்புரம் (2) சென்னபட்டினம்.

(Y. 45)

ஒற்றுமை

சித்திரப் படங்களுடனும் விநோதப் படங்களுடனும் தமிழ்மொழி வளர்ச்சி கருதி வரும் மாதபபத்திரிகை 'ஒற்றுமை'க்கு 6-வது வருடம் நவம்பர்மாதம் பிறக்கப்போகிறது. மாதிரிப் பிரதி இனும். வருடசந்தா உள்நாடு ரூபா1. வெளிநாடு ரூபா 1¾. ஏஜண்டுகள் தேவை. கல்வி கமிஷன்.

'ஒற்றுமை' ஆபீஸ்,
சைதாப்பேட்டை, மதராஸ்.

(H. 43.)

இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:— குரோதனஞு
ஐப்பசிமீ ௨௰௨ திங்கட்கிழமை.

"தொடர்புடைய தென்மொழி."

தென்னிந்தியாவிலே தமிழ் வழங்கும் நாட்டில் இக்காலத்தில் ஒரு சிலர் தமிழ்ச் சொற்களோடு வடசொற்களைக் கலந்து செய்யுளேனும் வசனமேனும் இயற்றவொண்ணாதென்னும் பிடிவாதமுடையவர்களாய்ப்பெரிதும் இடர்ப்படுகின்றார்கள். வடமொழி விரவாத தமிழ்நூல் யாதுமில்லையெனலாம். சம்ஸ்கிருதபதங்களைத் தமிழ்மொழியோடு விரவிப் பிரயோகித்தற்கான இலக்கணங்களை ஆன்றோர் பிரயோகவிவேகம் முதலிய நூல்களில் வகுத்துள்ளனர். பண்டைக்காலந் தொட்டு இந்நாள் காறும் தமிழ்ப்பாஷை உலகவழக்குச் செய்யுள் வழக்கு என்னும் இரு வழக்கினும் வடமொழி விரவாது வரக்கண்டிலேம். தமிழ்நாட்டில் வழங்கும் சில சொற்கள் தமிழ்மொழிகளோ சமஸ்கிருதபதங்களோ வெனப் பகுத்துணரமுடியா நிலையிலியிருக்கின்றன. இறையனார், நக்கீரர், திருவள்ளுவர், ஔவையார், கம்பர், கச்சியப்ப சிவாசாரியர், சேக்கிழார், பரஞ்சோதியார் முதலாஞ் செந்தமிழ்ப்புலவர்கள் தாம் தாம் இயற்றிய அரியநூல்களில் வடமொழியைப் புறக்கணித்தாரல்லர். சமயகுரவர் பட்டினத்தடிகள் தாயுமானவர் அபிராமிப்பட்டர் முதலாம் பெரியோர் தாம் தாம் பாடியருளிய தேவாரதிருவாசகதோத்திரப் பிரபந்தங்களில் வடமொழிப் பிரயோகத்தை விலக்கினாரல்லர். மெய்கண்டதேவர் முதலாம் சித்தாந்த சாஸ்திர ஆசிரியர்கள் இங்ஙனஞ் செய்யத் துணிந்தாரல்லர். சந்தம்பாவேதிற் சிறந்த வரேனத் தமிழ்ப் புலவர்களாற் பாராட்டப்படும் வில்லிபுத்தூரர் அருணகிரிநாதர் என்னும் இருவரும் தாம் தாம் இயற்றிய நூல்களில் ஏனைய புலவர்களைக்காட்டிலும் அதிகமாக வடமொழிப்பிரயோகஞ் செய்திருக்கின்றார்கள்.

பழைய உரையாசிரியர்களாகிய பரிமேலழகர், நச்சினார்க்கினியர், இளம்பூரணர், பேராசிரியர் ஆகிய இவர்களும், பிற்காலத்தில் விளங்கிய உரையாசிரியர்களாகிய சரவணப்பெருமாளையர் விசாகப்பெருமாளையர் நல்லூர் பொன்னம்பலபிள்ளையவர்கள் ஆகிய இவர்களும் வடமொழி விரவா உரைநடை எழுதினார்களல்லர்.

செந்தமிழ்வசனநடையிற் சிறந்துவிளங்கிய ஆசிரியர் சிவஞானயோகிகள் ஆறுமுகநாவலர் சபாபதிநாவலர் தாண்டவராயமுதலியார் முதலானோரும் வடமொழி கலவா வசனநூல் செய்தாரல்லர்.

இங்ஙனமெல்லாமிருப்ப, ஆங்கிலக் கல்வி விருத்தியாகித் தமிழ்க்கல்வி குன்றிவரும் இக்காலத்தில், யாம் மேலே சொல்லிய பிரகாரம் தமிழ் மொழிக்கும் சம்ஸ்கிருத பாஷைக்கும் இடையே வித்தியாசம் பாராட்டத் தொடங்கியிருத்தல் பெரிதும் மதியீனமாகும். தென்னிந்தியாவிலுள்ள இச்சிலரைப் பின்பற்றி யாழ்ப்பாணத்திலுள்ள சிலரினுஞ்சிலர் தமிழ்மொழியோடு வடமொழிப்பதம் விரவவொண்ணாதென்ற கொள்கையை ஆதரிக்கத்தொடங்கினர். தென்னிந்தியாவிலும் யாழ்ப்பாணத்திலும் நிரம்பாத்தமிழ்க் கல்வியுடையவர்களேஇவ்விபரீதக்கொள்கையின் பாற்பட்டனர். தென்னிந்தியாவிலே பிராமணக்கட்சியார் பிராமணரல்லாதார்கட்சியார் என இருகட்சியார் ஒருவரோடொருவர் மாறுபட்டிருக்கின்றார்கள். பிராமணரோடு மாறுபட்டுநிற்கும் கட்சியாரே வடமொழி மீதும் துவேஷம் பாராட்டுகின்றனர். ஆனால் நமது யாழ்ப்பாணத்தில் மேலே சொல்லப்பட்ட விதமாக இருகட்சியார் இல்லை. பிராமணரும் பிராமணரல்லாதாரும் தத்தம் வருணாச்சிரம தருமத்துக்குரிய மரியாதையோடு ஐக்கியமாக வாழ்கின்றனர். ஆதலால் யாழ்ப்பாணத்தவர்கட்கிடையே இவ்வாறான விபரீதக்கொள்கை உண்டாதற்குக் காரணம் யாதுமில்லையாம். இவ்விஷயமாக, பண்டிதை ஸ்ரீமதி ந பத்மாசனியம்மாள் எழுதிய வியாசமொன்றை இற்றைப் பிரசுரத்திற் பிறிதோரிடத்து வெளியிட்டிருக்கின்றேம். ஆசிரியர் சிவஞானயோகிகளே தாம் பாடியருளிய காஞ்சிப்புராணத்தில் தமிழ் சம்ஸ்கிருதம் என்னுமிருபாஷைகட்கிடையேயுள்ள தொடர்பையும் சமத்துவத்தையும், தெய்வத்தன்மையையும் "வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி" "இருமொழிக்குங் கண்ணுதலார் முதற்குரவர்" என்றற்றொடக்கத்த செய்யுட்களால் கன்கு விளக்கியிருக்கின்றனர். மேலும் யாழ்ப்பாணத்துள்ளவர்களாகிய நாம் மேலைத்தேச அறிவாளிகளான டாக்டர் ஜி. யூ. போப் முதலானோரால் இக்காலத் தமிழ்வசனநடையின் முதலாசிரியர் (Father of Mordern Tamil Prose) என்று புகழப்படும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களின் சிறந்த தமிழ் வசனநடையையும் உரைநடையையும் பின்பற்றி யொழுகுதலே மரபாகுமன்றி இந்நவீன கொள்கையுடையார் வெற்றுரைகளை யொரு போதுங் கைக்கொள்ளவொண்ணாதாம்.

இறந்தபின்னரும் மிருகங்கள் சஞ்சாரஞ்செய்கின்றன.

அனுபவத்திற் கண்ட சில அற்புதங்கள்.

சார்ஸ் எல். துவிடேல் (Rev. Charles L. Tweedale) என்னும் பாதிரியார் "இறந்தபின்னரும் மனிதன் செய்யுஞ் சஞ்சாரம்" என்னும் நாமம் புனைந்த ஒரு புத்தகத்தை எழுதி வெளியிட்டிருக்கின்றார். அந்தப் புத்தகத்திலே அவர் இறந்துபோன மிருகங்கள் விஷயமாகவும் தாம் அனுபவத்திற்கண்ட சிலவற்றை எழுதியிருக்கின்றார். அவைவருமாறு:

"மனுஷன் தான் மேலான சென்மம் என்ற பெருமிதத்தினால் தான்மாத்திரம் இறந்தபின்னரும் ஆவேசமாகவும் ஆவியாகவும் சஞ்சரித்தல் கூடுமென்றும், தான் வைத்துவளர்க்கும் நாய் பூனை முதலான மிருகங்கள் அந்த நிலையை அடையமாட்டாவென்றும் வீணே எண்ணிக்கொள்ளுகின்றான். மனுடனுடைய தேகத்தையும அறிவுள்ள (நாய் பூனை மாடு குதிரை முதலிய) மிருகங்களின் சரீரத்தையும் நட்பமாக ஆராய்ந்து பார்க்கும்போது இவ்விருபிரிவான உடம்புகளுக்கிடையில் அதிக பேதமில்லை யென்பதும் இனிது புலப்படும். மனுடன் ஊடாடும் விதத்திற்கும் சில மிருகங்கள் ஊடாடும் விதத்திற்கும் அதிக வித்தியாசம் காணப்படவில்லை சில மிருகங்கள் புத்தியிலும் மனிதனை யொத்திருக்கின்றன.

சகல ஆன்மாக்களும் சிருஷ்டிகர்த்தாவாகிய ஈசுவரனாலேயே வைத்துப் பரிபாலிக்கப்படுகின்றன. எப்படி மனிதனுடைய முற்பிறப்பின் மர்மங்களையும் அவன் வாழ்க்கையின் தாரதம்மியத்தின் காரணங்களையும் மரணத்தையும் அறிய முடியாம லிருக்கின்றேமோ அப்படியே நாய் முதலிய மிருகங்களின் மர்மங்களையும் அறிய முடியாமலிருக்கின்றேம். அறிவுள்ள சில மிருகங்கள் மனிதரைப்போல இறந்தபின்னரும் சஞ்சரிக்கின்றன என்று சொல்வதற்குப் பல தக்க ஆதாரங்கள் உள்ளன. இறந்தபின்னரும் சில மிருகங்கள் சிலகாலத்திற்கேனும் சஞ்சாரஞ்செய்கின்றன என்பதை அனுபவத்திற் கண்ட சிலர் எழுதியிருக்கின்றார்கள். மிருகங்கள் இறந்தபின்னரும் ஆவேசமாகச் சஞ்சரிப்பனவென்பதும், அந்த ஆவேசங்களை மனிதர் காண்பதுபோல் வீட்டிலுள்ள (பூனை முதலிய) மிருகங்கள் காணவல்லன வென்பதும் நான் எனது வீட்டிலே நேரிற் கண்ட கீழே சொல்லப்படும் அனுபவங்களினால் நன்கு விளங்கும்.

எனது தாயாரின் சகோதரி 1905-ம் ஆண்டு இறந்தனள். 1910-ம் ஆண்டு எனது உத்தியோக எல்லையாகிய உவெஸ்றன் என்னுமிடத்திலுள்ள வீட்டில் என் தாயாருடைய சகோதரியின் ஆவேசம் இடையிடையே வந்து தோற்றத்தொடங்கியது. அந்த ஆவேசம் வந்து தோற்றும்போதெல்லாம் அவள் வளர்த்த நாயின் உருவமும் ஆவேசத்தோடு காணப்பட்டது. என் தாயாரின்சகோதரி இறத்தற்கு 5 வருடங்களுக்கு முந்தி அவள் வளர்த்த நாய் இறந்துவிட்டது. இந்த ஆவேசங்கள் இரண்டும் சில சமையத்திற் பட்டப்பகலிலும் சில சமையத்திற் பிரகாசத்தோடு தீபம் எரிந்துகொண்டிருக்கும் இராக்காலத்திலும் காணப்பட்டன. ஒருமுறை என் தாயார் தன்சகோதரியின் ஆவேசத்தைத் தீண்ட முயன்றபோது பக்கத்தே நின்ற நாயின் ஆவேசம் தன் எசமாட்டியைத் தீண்டவொட்டாது என் தாயாரைத் தடுத்துச் சிறிக் குரைத்தது. இந்த இரு ஆவேசங்களையும் நாயின் ஆவேசம் குரைத்த சத்தத்தையும் நாங்கள் ஆறு பேர் நேரிற் கண்ணாரக் கண்டும் காதாரக் கேட்டும் உள்ளோம். நாயின் ஆவேசம் ஒரு சமையத்தில், போசனவேளையில் அடிக்கப்படும் சேமக்கலத்தின்மேற் பாய்ந்து அடித்துச் சத்தமுண்டாக்கிவிட்டது. இன்னொரு சமையத்தில் இந்த நாயின் ஆவேசம் என் மனையாளுடைய தோளிற் பாய்ந்தது. எங்கள் வீட்டில் நாயுமில்லை; நாங்கள் எக்காலத்தாயினும் நாய்வளர்த்ததுமில்லை. இந்த நாயின் ஆவேசத்தைக் கண்ட ஆறுபேருள் மூவர் முந்தி ஒருபோதும் இந்த நாயை உயிரோடு கண்டவரல்லர், இதன் உருவத்தைப் பிறர் சொல்லக் கேட்டவருமல்லர். இந்நாயின் பிரதிமைப்படத்தைப் பார்த்தவருமல்லர், நாயின் ஆவேசம் குறிய ரோமத்தோடும், அந்த ரோமங்களுக்கிடையே தோல் காணத்தக்கதாயும், குறிய வாலோடும், இடதுபக்கத்திலே ஒரு பெரிய கரிய மறுவோடும், பிரகையானகண்களோடும், நாங்கள் உற்றுப் பார்த்தபோது அதன் சரீரம் இளைத்து நடுங்கியபடியும் தோற்றியது. மேலேசொல்லப்பட்ட இக்க அடையாளங்களையெல்லாம் நோக்குமிடத்தும், பட்டப்பகலிலே தன் எஜமாட்டியின் பின்னே இந்த நாயின் ஆவேசம் பின்தொடர்ந்து சென்ற தன்மையைப் பார்க்குமிடத்தும் இது நமது தாயாரின் சகோதரி வளர்த்தநாயின் ஆவேசம்என்பதற்கு எள்ளளவேனும் சந்தேகப்படவேண்டியதில்லை.

வேறொரு மிருகத்தின் ஆவேசத்தை நாலுவருடகாலமாக நான் என்மனைவி குடும்பத்தவர், வேலைக்காரர் எல்லோரும் ஐம்பது முறை வரையிற் கண்டுள்ளோம். ஒருசமையத்தில் எங்கள் படுக்கையறையில் ஒருநாய் தோற்றியது. படுக்கையறைக்குச் சென்ற எனது மனையாளைப்பின் தொடர்ந்துபோன பூனையும் இந்நாயின் ஆவேசத்தைக்கண்டு வெருண்டு நாங்கள் முகங்கழுவும் தண்ணீர்ப் பாத்திரத்தை வைத்திருக்கும் மேசைக்குமேலாகத் துள்ளியெழுந்து குதித்து ஒருமூலையில் மயிர் சிலிர்த்தபடி ஒதுங்கிகின்றது. இன்னொரு சந்தர்ப்பத்தில நான் வாத்தியப்பெட்டி வாசித்துக்கொண்டிருக்கும்போது சடுதியாக ஒரு ஆவேசம் தோற்றியது. இதனை இப்படிப்பலமுறைகண்டுள்ளேன். எங்கள் வீட்டிலுள்ள பூனையும் இந்த ஆவேசத்தைக்கண்டு வெருண்டு தன் பின்னங்காலில் எழுந்துநின்று உறுமிப் பின் பயந்து ஓடியது. இவற்றையெல்லாம் நான் வெளிப்படையாக நேரிற் கண்டுள்ளேன்"

தென்மொழியோடு வடமொழி கலக்கவொண்ணாதா?

[புலோலி
பண்டிதை ஸ்ரீமதி ந பத்மாசனி அம்மாள்
எழுதியது]

உலகத்தின்கண்ணே வழங்கப்பட்டுவருகின்ற பற்பல பாஷைகளிலும் வடமொழியும் தென்மொழியுமே சொற்சுவை பொருட்சுவை முதலான பல நலனும் ஒருங்கமையப்பெற்ற தெய்வீகபாஷைகளாகும். ஆதிகாலத்திலே பேருளாளராகிய சிவபிரான் இவ்விருபாஷைகளையு முண்டாக்கி வடமொழியைப் பாணினி முனிவருக்கும் தென்மொழியை அகத்திய முனிவருக்கும் உபதேசித்தருளினர். சிவபிரானுபதேசிக்கப்பட்ட படியே அவ்விரு முனிவர்களும் அவற்றிற் கிலக்கணங்களை வகுத்து உலகில் விளங்கச் செய்தருளினர்.

இவ்விரண்டு மொழிகளையும் உண்டாக்கியவர் முழுமுதற்பொருளான சிவபெருமானே. இவற்றிற்கு இலக்கணம் வகுத்துக் காலநிலைக்கேற்றவாறு பண்புபடுத்தியோரும் ஒப்புயர்வற்ற தவசிரேஷ்டர்களே. இவற்றை வழங்கிவந்தோரும் பெரியோர்களே. இங்கிவற்றினுண்மையை,

> "வடமொழியைப்பாணினிக்கு வகுத்தருளி யதற்கிணையாத், தொடர்புடைய தென்மொழியை யுலகமெலாந் தொழுதேத்துங், குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப்பாகரெனிற், கடல்வரைப்பினிதன் பெருமையாவரே கணித்தறைப்பார்."
>
> ",இருமொழிக்குங் கண்ணுதலார் முதற்குரவரிசைவாய்ப்ப, இருமொழியும் வழிப்படுத்தார் முனிவேந்தரிசைபரப்பும், இருமொழியு மான்றவரே தழீஇயினாரென்றாலிவ், இருமொழியு நிகரென்னு மிதற்கைய முளதேயோ".

என்ற முனிவரர் வாக்குக்களான் நன்குணரலாம்.

ஆகவே, வடமொழியும் தென்மொழியும் சமத்துவமுடைய தெய்வ மொழிகளென்பது தெள்ளிதின் விளங்குகின்றது.

இது இங்ஙனமாக, இக்காலத்திய தமிழறிஞர்களி லொருபகுதியார் தமிழில்வடமொழி கலத்த லாகாதெனவும், மற்றப் பகுதியார் கலத்தலாகுமெனவும தத்தம் மனங்கொண்ட வாறெல்லாம் சொல்லிவருகின்றனர். ஆதலின் அதனை யீண்டு ஆராய்வாம்.

பல்லாயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன் கண்ணுதற்பெருங் கடவுளும் கழகமோடமர்ந்து பண்ணுறத் தெரிந்தாய்ந்த செழுந்தமிழாக, அமிழ்தினுமினிய நம் தமிழ்மொழி வழங்கிவந்தது. அக்காலத்தில் வடமொழியு மங்ஙனமே சீர் சிறந்து விளங்கியிருந்தது. ஆனாலும் அவைகள் ஒன்றுடனொன்று கலப்பின்றி யிருந்தனவென்றுரைத்தற்குத் தக்க ஆதாரமில்லையென்றே சொல்லலாம். அக்காலத்திய தமிழ்நூல்களெல்லாம் இடைப்பட்ட காலத்தில் வெள்ளத்தி லாழ்ந்துபோயின, எஞ்சியுள்ள சிலவே இக்காலத்தில் வழங்கப்பட்டுவருகின்றன. அந்நூல்களில் இருமொழிக்கும் பொதுவாகவுள்ள 'கந்தருவம்' 'திரு' 'அகம்' 'முகம்' 'மனம்' முதலான பற்பல பதங்கள் வழங்கப்பட்டிருத்தலைக் காண்கின்றேம். இவைகள் வடசொற்களா அன்றித் தமிழ்ச் சொற்களா? இவற்றின் வடமொழி ரூபங்கள் இயற்சொற்களா? அன்றித் தென்மொழி ரூபங்கள் இயற்சொற்களா? இவைகளை எப்பாஷைச் சொற்களென்று சொல்லுவது. ஒரு திராவிடனைக் கேட்டால் தமிழ்ச்சொல் என்றுரைப்பான்; ஒரு ஆரியனைக் கேட்டால் வடசொல் என்றே சொல்லுவான். ஒவ்வொருவரும் தான் பிடித்த முயலுக்கு மூன்றேகால் என்றுங்குத் தம் தம் கொள்கைகளையே சாதிப்பார்கள். எவ்வளவு தூர மலைந்தாலும் இதற்கொரு முடிவையுங் காணமாட்டார்கள். இறுதியில் இருமொழியும் சமத்துவமுடையவை யாகையால், இரண்டுக்கும் தொடர்புடைய சொற்களென்றே உரைத்தல்வேண்டும். சொற்ப வேறுபாடு கருதி வெவ்வேறு சொல்லென உரைத்தலாகாது. ஆகவே வடசொற்கள் தமிழினும் தமிழ்ச்சொற்கள் வடமொழியினுங் கலந்திருக்கின்றன. அந்நிய பாஷைச் சொற்கள் கலக்கப்படும்போது சந்தி முதலியனவற்றில் வேற்றுமையுண்டாவதையும் ஒருவிதமாய்ச் சந்தியைப் பொருத்தினும் பொருள்வேறுபாடுடையதா யிருத்தலையும் நாம் காண்கின்றேம்.

இவ்வாறு தொடர்புடைய பாஷைகளுள் எப்பயன் கருதியாவது ஒரு பாஷைச்சொல்லை மற்றப்பாஷையுள் இருந்தபடியே பிரயோகித்தலால் வருங் கேடு ஒன்றுமில்லை. பாஷை என்பது வடமொழி ரூபம்; பாடை யென்பது தென்மொழி ரூபம். இதனைத் தமிழிலாவது வடமொழியிலாவது பாஷை யெனப் பிரயோகித்தலே அழகையுடையதாகும். பாடை என உரைத்தலால் அமங்கலப்பொருளும் தோற்றுதல் உலகமறிந்த உண்மை. ஆயினும் வாசகர்கள் தமிழில் ஆரிய எழுத்துக்களைச் சேர்த்து எழுதிவருதல்போல் வடமொழியினும் எழுதலாகுமெனக் கேட்டலும் கூடும். ஆனால் தமிழ்போல் ஆரியம் உலகவழக்கில் வழங்கப்பட்டுவரும்பாஷையாகவில்லாமலிருந்தலினால் அவ்வாறு வழங்கப்படுவதில்லை; அன்றெனில் வழங்கப்பட்டேவரும்.

வடமொழிப் பதங்களே தென்மொழியில் திரிக்கப்பட்டுவருகின்றன வென்னும் எண்ணமுடையாரே வடமொழி தமிழிற் கலத்தலாகாது என உரைப்பவர். பொதுச் சொற்களின் இருவித ரூபங்களும் இயற்கையாயமைந்தன; ஒன்று மற்றொன்றுப் திரிந்ததன்று என்னும் உண்மையை உணர்ந்தார் அங்ஙனங் கூறமாட்டார். இன்னும் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனர் திருக்குறளின் முதலாவதாகிய "அகரமுதல வெழுத் தெல்லா மாதி, பகவன் முதற்றே யுலகு" என்னுங் கவியிலேயே பகவன் என்ற வடமொழிப் பதத்தைப் பிரயோகித்திருக்கின்றனர். மற்றைய குறட்பாக்களிலும் ஆங்காங்கே வடசொற் பிரயோக மிருத்தலைக் காண்கின்றேம். இராமாயணம், பாரதம், கந்தபுராணம் முதலான இதிகாச புராணங்களிலும் ஆங்காங்கே வடசொற் பிரயோகமிருத்தலைக் காணலாம். இவற்றைக் கொள்ளாதுவிடில் உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் இருந்துவருகின்ற வடசொற்களை இல்லாமற் செய்தல் வேண்டும். வடமொழிக் கலப்பே பெரும்பாலும் நிரம்பப்பெற்றுள்ள சித்தாந்த சாஸ்திரங்களைத் தீக்கிரையாக்கவேண்டும். சுத்தமான தமிழ் நூற்களாகப் பல நூல்களையு மியற்றல் வேண்டும் இதன்பின்னன்றே தமிழில் வடமொழி கலத்தலாகாது எனக் கூறலாம்.

ஆதலால் இறைவனாலுண்டாக்கப்பட்டகாலந் தொடங்கி ஒன்றற்கொன்று தொடர்பாடுடையனவாயிருக்கும் வடமொழி தென்மொழிகளை அந்நிய மொழிகள் போற் பிரித்துவைத்து அல்லற்படுதல் அறிவுடையார்க் கமைத்ததன்று.

அறிவித்தல்.

1926-ம் ஆண்டு தைமீ 1-ந் திகதி தொடங்கி மார்கழிமீ 31௨ வரைக்கும் இதன்கீழ்க் குறித்த கப்படும் வேலைகளைச் செய்வதற்கும் சாமான்களைக்கொடுப்பதற்குமான கேள்விப்பத்திரங்கள் 1925ஆ கார்த்திகைமீ 17௨ செவ்வாய்க்கிழமை காலை 10 மணி வரையிலும் என்னால் ஏற்கப்படும் —

1. தெருக்களுக்கு விளக்கேற்றல்
2. குப்பைவண்டிகளுக்கு இழுக்கு மாடுகளும் சாரதிகளும் கொடுத்தல்.
3. அரிசிகொடுத்தல்
4. செங்கல் சுண்ணாம்பு முதலிய சாமான்கள் கொடுத்தல்
5. மார்க்கட், காலை புல் முதலிய குத்தகைகள்

வேறு விளம்பரங்கள் சுகாதார சங்க லிகிதரிடம் கேட்டறிந்துகொள்ளலாம்.

W. G. Vallipuram,
சுகபரிபாலனசங்கத்தலைவர்க்காக
சுகபரிபாலனசங்கக்காரியதரிசி,
1925ஆ ஐப்பசிமீ 22௨,
(G. 534.)

காலநிலை.

இப்பொழுது மழை இடையிடையே பெய்திருக்கின்றது. நெற்பயிர்கள் நன்கு வளர்கின்றன. நேற்றுக் காலை அதிகமழை பெய்தது.

தபாற்கந்தோர்ப்பகுதி அறிக்கை

சென்ற வருடம், அதற்கு முந்திய வருடத்தைக் காட்டிலும் இருமடங்கு வருவாய அதிகரித்திருக்கின்றதென ஷை கந்தோர்த்தலைவர் வெளியிட்டிருக்கின்றார்

காரைநகர்ச் சைவ மகாசபை

இச்சபையின் ஆதரவின்கீழ் நிகழும் குரோதன ஹு புரட்டாசி௴ 31௳ (தீபாவலித் தினத்தன்று) பிற்பகல் நாலுமணியளவில் சைவமகாசபைச் சபாமண்டபத்தில் இராமநாத வித்தியாலய சங்கீத வித்துவான் பிரம்மஸ்ரீ ச. பரமேஸ்வர ஐயர் அவர்களால் சங்கீத பஜனை நடத்தப்பெற்றது.

புதிய பிறக்ரர் மூவர்.

ஏலவே நிகழ்ந்த பிறக்ரர் பரீக்ஷையிற் சித்திபெய்திய ஸ்ரீ கி. நவரத்தினம், ஸ்ரீ ஏ. எஸ். சபாபதி, ஸ்ரீ ஆர். எம். இராமலிங்கம் என்னும் மூவரும் சென்ற வியாழக்கிழமை கொழும்புச் சுப்பிறீங்கோட்டு நீதிபதி மிஸ்ரர் ஹிகே நாவர்கள்முன்னிலையில் சுப்பிறீங்கோட்டுப் பிறக்ராராக வேலை பார்ப்பதற்குச் சத்தியஞ் செய்திருக்கின்றனர்.

டிஸ்திறிக் நீதிபதி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நீதிபதியாகவிருந்த மிஸ்ரர் ஜீ. டபிள்யூ. உட்ஹவுஸ் அவர்கள் விடுமுறைபெற்று இங்கிலாந்துக்குச் செல்ல இதுகாறும் கௌரவ சேர் அ. கனகசபையவர்கள் டிஸ்திறிக் நீதிபதியாகக் கடமைபார்த்து வந்தனர். இப்பொழுது ஊவாமாகாண ஏசன்றாகவிருக்கும் மிஸ்ரர் ஈ. ரீ. மில்லிங்ரன் அவர்கள் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நீதிபதியாக நியமனம் பெற்றிருக்கின்றனர். மிஸ்ரர் மில்லிங்ரன் அவர்கள் வருகிற நவம்பர்௴ 9௳ திங்கட்கிழமை தமது கடமையை வகித்து விசாரணை நடத்துவர்.

சைவப் பிரசங்கம்

நிகழும் குரோதன வருஷம் ஐப்பசி மாதம் 4௳ (20—10—25) செவ்வாய்க்கிழமை மாலை 6½ மணி தொடக்கம் திரிகோணமலை முத்துக்குமாரசுவாமி கோயில் மண்டபத்தில், ஸ்ரீராமகிருஷ்ண விஜயப் பத்திரிகாசிரியர் பிரமஸ்ரீ கி. சி. இராமசுவாமி ஐயர் பி. ஏ., எல் ரீ. அவர்களால் "விரதம்" என்னும் விஷயமாக ஒரு பிரசங்கஞ்செய்யப்பட்டது. அடுத்த தினமாகிய புதன்கிழமை மாலை ஸ்ரீ ராமகிருஷ்ண ஆச்சிரமத்து, திருவாளர் மா. பீதாம்பரம் பிள்ளை அவர்களால் "மங்கையர்க் கரசியார்" என்னும் விஷயமாக ஒரு சொற்பொழிவு நடத்தப்பட்டது.

கடித.

மதுக்கடை நீக்கம்.

சென்ற வாரம் ஹெண்டலா என்னுமிடத்துள்ள மதுக்கடையை நீக்கும் வண்ணம் சம்மதம் கூறும்பொருட்டு, அதற்குச் சேர்ந்த நான்கு கிராமங்களிலும் உள்ளோர் அங்குள்ள றோமன் கத்தோலிக்க பாடசாலையிற் கூடினர் சம்மதம் சொல்லும் உரிமைபூண்டோர் தொகை 823. இவர்களுள் 617 பேர் தவறணை வேண்டாமெனச் சம்மதம் கூறினர். 9 பேர் வேண்டுமென்று சாதித்தனர். ஷை தவறணை நூற்றுக்கு எழுபத்துநான்கு விகிதமானோருடைய சம்மதத்துடன் நீக்கப்பட்டது.

பணம் ஆட்கொல்லி.

சாராயக் குத்தகைகாரர் தங்கள் தவறணைகளில் சாராயம் விற்றுவந்த பணத்தை இராக்காலத்தில் தவறணைபூட்டியபின் எடுத்துச் செல்வது வழக்கம். சிலநாட்களுக்குமுன் ஒரு இரவு கந்தானையிலுள்ள சாராயத் தவறணைக் குத்தகைக்காரன் அத்தவறணையிலுள்ள பணத்தை எடுத்துக்கொண்டு புறப்பட்டனன். இதற்குச் சிறிதுவேளைக்குமுன் குத்தகைகாரனிடம் 200 ரூபா கடன் வாங்கியிருந்த மிஸ்ரர் டபரி என்னும் ஒருவர் அப்பணத்தைத் தனது வேலைகாரனாகிய பெம்பி அப்பு என்னும் ஒருவனிடம் கொடுத்தனுப்பினார். இத்தவேலைக்காரன் அந்த இருநூறு ரூபாவையும் குத்தகைகாரனிடம் கொடுத்துத் திரும்பிவிட்டான். குறித்த குத்தகைகாரன் அப்பணமும் சாராயம் விற்றபணமுமாக ஐந்நூறு ரூபாவுடன் ஒரு றிச்சோவண்டியில் வழக்கமாகச் செல்லும் தெருவழியாக வீட்டுக்குச் சென்றனன். பெல்லேகிய நான்கு தஸ்கரர் இடையில் எதிர்ப்பட்டு வழிமறித்தார்கள். அவர்களுள் ஒருவன் றிச்சோ இழுத்த கூலியாளை வாளுக அடித்தான். கூலியாள் வண்டியைத் தெருவில்விட்டு உயிருடன் ஓடி மறைந்தான். மற்ற மூவரும் வண்டியை நொருக்கியபின் குத்தகை காரனையும் வாளுகத் தாக்கினார்கள். குத்தகைகாரன் இடும் அபயக்குரல் கேட்டு அயலிலுள்ளோர் அங்கு ஓடிச் சென்றார்கள். இதற்கிடையிலே தஸ்கரர் 500 ரூபாவுள்ள பணப் பையை அபகரித்துக்கொண்டு ஓடி மறைந்தார்கள். குத்தகைகாரன் அறிவு சோர்ந்து நிலத்தில் வீழ்ந்து மயங்கிக்கிடந்து பின்னர் அறிவு தெளிந்து தன்னைச் சருவிய நால்வருள் ஒருவர் ஷை பெம்பி அப்பு என்றும் இன்னொருவன் மிக்கேல் விதானை யென்றும் குறிப்பிட்டனன். இந்த இருவரும் பொலீசாரால் பிடித்துச் சிறைப்படுத்தப்பட்டனர், மற்ற இருவரும் இன்னும் பிடிபட்டிலர்.

முன்னொருபோதுமில்லாத கடும் புயல்

ஏழாயிரம் பேர் இறந்தனர்;

நாற்பது கப்பல்கள் மூழ்கின.

சென்ற வெள்ளிக்கிழமை பார்சிய குடாக்கடலில் முன்னொருபோதுமில்லாத சண்டமாருதம் அடித்தது. 7000 பேர் வரையில் மாண்டனர்; நாற்பது கப்பல்கள் அழிவாய்ப்பட்டன. டஹ்றீன் என்னும் பாகம் இந்த மாருதத்தினாற் படுசேதமுற்றது.

இராணைமடுக் கொலைவழக்கு

சென்ற வெள்ளிக்கிழமை இராணைமடுக்கொலைவழக்கு, சாவகச்சேரிப் பொலிஸ்கோட்டில் விசாரணை செய்யப்பட்டது யாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டுமுதலியாரை ஒழிந்த ஏனைய எதிரிகள் எல்லோரும் அங்கேகொண்டுபோகப்பட்டார்கள் முதலியார் பூரணசுகம் பெறாமையினால் கோட்டில் வெளிப்பட்டிலர். முதலியார்பக்க நியாயதுரந்தரராகிய ஸ்ரீ. நல்லையா அவர்கள் யாழ்ப்பாணம் வைத்தியசாலையிலிருக்கும் முதலியாரை விசாரிக்கும்பொருட்டு யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிபதிக்கு உத்தரவிடவேண்டுமென்று நீதிபதிக்கு மனுப்பண்ணினர். அதற்கு நீதிபதி அப்படியான ஒரு நோக்கம்சுப்பிறிங்கோட்டாருக்குஇருப்பதைத் தாம் பத்திரிகைவாயிலாக அறிந்ததாகவும் அந்த விஷயமாக இதுகாறும் ஒரு கட்டளையும் தமக்குவரவில்லையென்றும் கூறி, நியாயதுரந்தரரது விண்ணப்பத்தை நிராகரித்தனர். இவ்வழக்கிற்சம்பந்தப்பட்ட விசாரணைகளெல்லாம் சாவகச்சேரி பருத்தித்துறைக்கோட்டு நீதிபதியால் விசாரணைசெய்யப்பட்டபடியால் குறித்த பதினொராம் எதிரியையும் தாங்களே விசாரிக்கவேண்டுமென்று யாழ்ப்பாணம் பொலிஸ்பரிசோதரும் ஷை நியாயதுரந்தரருடைய விண்ணப்பத்துக்குமாறாகக்கூறினர். வழக்குப்புத்தகம் "அற்றேணிச்ஜெனற"லிடமிருந்து இன்னமும் அனுப்பப்படாமையினால் இவ்வழக்கு நவம்பர்௴ 6௳ தவணையிடப்பட்டிருக்கிறது.

கிழவனாரின் புகையிலை வியாபாரம்.

சிலநாட்களுக்குமுன் அறுபதுவயதுள்ள அருணாசலம் அம்பலவாணர் என்றுமொருவர் புகையிலை வாங்கும்பொருட்டு 650 ரூபாவுடன் குருநாகலுக்குச்சென்று சுந்தரம் என்னும் ஒருவருடன் தங்கினார். அவர் ஒருதினம் 550 ரூபாவை எடுத்துக்கொண்டு ஹிங்காலா என்னுமிடத்துக்குப் புறப்பட்டுப் புத்தளச் சந்தியை அடைந்து மோட்டர்பஸ் வண்டியை எதிர்நோக்கினார். வண்டி அகப்படாமையினால் ஓர் சாராயத்தவறணைக்குச்சென்று ஐம்பது சதம்கொடுத்துச் சாராயம் குடித்தபின் சிறிது ஆவேசம் உடையராய், கடைவீதியில் வெற்றிலை விற்கும் றன்மனிக்கா என்னும் பெண்ணிடம் சென்று வெற்றிலை வாங்கி உண்டு சாராயத்தின் உதவியினால் அவளுடன் அவளது வீட்டுக்குச்சென்று மறுநாட்காலை துயில் நீங்கி எழுந்தார். கிழவனாருடைய இடுப்பிலிருந்த 550 ரூபாவும் மாயமாய் மறைந்தது. இதனைக்கண்ட வியாபாரியார் அப்பெண்ணை அழைத்துத் தனது பணத்தைக்கொடுக்கும்படி வற்புறுத்தினர். அவள் தலைவியாகிய ஜோனிநோனா என்னும் வேறொருபெண் கிழவனைக் கடிந்து வசைமொழிகூறி வீட்டின் புறத்தே செலுத்தினாள். வியாபாரி அவமானத்துடன் பொலிஸ்தானத்துக்குச் சென்று நிகழ்ந்த சமாசாரத்தைச் சொல்லுவதற்கு வெட்கமுற்று ஒருவீட்டு விறாந்தையில் நித்திரையாய்க்கிடந்தபோது யாரோ தன்னிடமுள்ள பணத்தைத் திருடினார்களென முறையிட்டபின் குறித்த சுந்தரம் வீட்டுக்குச் சென்று நடந்தவிஷயத்தை உள்ளபடி கூறினர். அவர்களிருவரும் ஒரு பிறக்ராரிடம் சென்று உண்மையைக் கூறினார்கள். பொலீசாரும் இதையிட்டு விசாரணைசெய்தனர். ஜோனிநோனா என்னும் பெண்ணின் புருஷனிடம் ஒரு நூறுரூபா நோட்டிருப்பதையும், இருவரும் அங்குள்ள கடையொன்றில் அறுபது ரூபா பெறுமதியான பொருள்களைவாங்கினார்களென்றும், நாற்பதுரூபாவை அக்கடையில் சேமித்து வைத்திருக்கிறார்களென்றும், கதைகள் பரந்தன. வெற்றிலைவிற்ற றன்மனிக்கா என்னும் பெண் ஐம்பதுரூபாபெறுமதியான நகைகள் வாங்கினமையையும் அப்பெண் அங்குள்ள மகமதியன் ஒருவனிடம் ஐம்பதுரூபா சேமித்து வைத்திருப்பதும் அறிந்த பொலீசார் அவர்களைப்பிடித்துக் குருநாகற் பொலிஸ்கோட்டில் வழக்குத்தொடர்ந்திருக்கின்றனர்

பாட்டியாலா மகாராஜா.

சென்றவாரம் பாட்டியாலா மகாராஜா இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்குப் புறப்பட்டிருக்கின்றனர்.

கண்ணைப் போற்றும் விதம்.

மானிடதேகத்திலுள்ள எல்லா உறுப்பினுள்ளும் மிகச்சிறந்தது கண் அது மிக்க உணர்ச்சியுள்ளதும், மின்னல்போல் மினுக்கப்பட்டதுமாய் மூளை நரம்புமண்டலம் ஆகிய இவ்விரண்டினோடும் ஐக்கியமாய்ச் சேர்ந்து அமைந்திருப்பது போலவே இரத்தவோட்டத்தோடும் சம்பந்தப்பட்டிருக்கின்றது தேகத்தில் யாதேனும் நோய் நேர்ந்தால் அதற்கும் ஊறுபாடு உண்டாகும்.

இனி உபயோகிக்கும் விளக்கைப்பற்றிச் சொல்லு மிடத்தில் தேங்காயெண்ணெய், இலுப்பெண்ணெய், நல்லெண்ணெய் முதலான இவைகள் விட்டெரிக்கப்படும் விளக்கையன்றி மண்ணெண்ணெய் விளக்கைப் பாவிக்கக் கூடாது ஏனெனில் மண்ணெண்ணெய் நச்சுத்தன்மையுள்ளது அதினால் கண்ணுக்கு எரிச்சல், புகைச்சல், நீர்வடிதல் கண்நோ, கண்குத்து, மாலைக்கண் முதலிய நோய்கள் உண்டாகின்றன கண்ணினால் சூரியனைப் பார்க்கையில் அதனை நேரே உற்றுப் பார்க்கலாகாது. சூரியனைவிடப் பன்மடங்கு குறைந்த ஒளியையுடைய மற்ற வானஜோதிகளின் கிரணம் நமது கண்ணிற்குள்ளே விழுமாயின் கண்ணுக்குக் கூச்சமுண்டாகும். வெளிச்சமானது எவ்வளவுதூரம் நாலுபக்கமும் பரந்து அதன் கிரணங்கள் மட்டாகிக் கண்ணுக்குட்செல்கின்றனவோ அவ்வளவுக்கு அநுகூலம் உண்டு. ஒருபக்கத்தில் வெளிச்சத்தையும் மற்றப்பக்கத்தில் இருட்டையும் மாறிமாறிப் பார்ப்பதும் கேடுதிக்கிடமானது

கண்ணில் எரிச்சல் புகைச்சலுண்டானபோதாவது அது மெலிவுற்றிருக்கும் காலத்திலாவது அதைக் கவனமாகக் காப்பாற்றவேண்டியது மிகவும் முக்கியமாகும் கண்ணின் மெலிவினாலாவது தேகத்தின் சௌக்கியக் குறைவினாலாவது இந்த இரண்டு காரணங்களினாலுமாவது கண்ணுக்குக் கேடு உண்டாகும். ஆனால் தேகம் பலவீனமாயிருக்குங் காலத்தில் வெகு நுட்பமான உறுப்பாகிய கண்ணுக்கு எளிதில் ஊறுபாடு உண்டாகிறதென்பதைப் பெரும்பான்மையும் ஒருவரும் உணருவதில்லை நோயாய் இருக்கும்போதும் நோய் நீங்கிச் சௌக்கிய முண்டாகும்போதும் பெரும்பான்மையாய்க் கண்ணுக்கு ஊனம் உண்டாகிறது ஆனால் எல்லோரும் அரிதிற்கிடைத்த கண்ணாகிய உறுப்புக்கு இடையூறு வாராவண்ணம் பாதுகாத்தல் வேண்டும்.

இங்ஙனம்,
சே. சிவகுருநாதன்.

சற்போதமஞ்சரி.

(வண்ணை நகர்
ஸ்ரீ க. வைத்தியலிங்கபிள்ளை
எழுதியது.)

மனத்தோடு காயம் வாக்கு முதலிய
திரிகரணங்களுஞ் செப்பிய சுத்தம்
இல்லாத் திருடர் தனியே யிருந்து
செய்யும் பூசை செபங்களுந் தந்தை
அன்னைய ரந்திய காலத் தவர்க்கடம்
மருங்கி லிருந்துசாக் காட்டா மக்களும்
"துளத்துறு மல்லித் தண்டுபோற்" குடர்கள்
வாடிப் பசியால் வருந்துங் காலை
இல்லா வுணவும் இரவலர் தமக்கு
அவியா "தலகைபோற்" பிறரறி யாமற்
பூட்டிவைக் கின்ற லோபியின் பொருளும்
நாயகன் பிணியால் நலிந்தகா லத்தில்
பக்கலி லுற்று மனம்பதை பதைத்துப்
பணிசெய் துபசரிக் காத பாரியும்
மைந்தரைப் பெற்று வண்பிழைத் தாமோள
வதுவைசெய் திட்ட மங்கையைத் தணந்து
பிறன்மனை புகுமன் பில்லாப் புருஷனும்
அறிஞர்கள் வைத மவைக்காந் தனிலே
பேசமாட் டாமற் பெருநடுக் குற்றுக்
காயம் வியர்ப்போன் கற்றிடு கல்வியும்
சுகதுக்க காலங் களிலே சூழ்ந்து
கிளர்ந்துகொண் டாடி வருந்தாக் கிளைகளும்
மெய்பனிப் புற்றுக் கைகால் விறைத்துப்
புந்தி யலமரும் போதினி லுடலைப்
போர்ப்பதற் கில்லாக்கம்பளிப்போர்வையும்
இறப்பொடு பிறப்பிலா எம்பெரு மானைப்
பாடா திருந்த நரரைப் பதியெனப்
பகர்ந்து பாடித் துதித்தபா வினமும்
'பிடாரியைப்பெண்டாய்க்கொண்டதுபோல'
பத்தா வோருவரை பகர்ந்தா லதற்குச்
சுடுமொழி யநேகம் நின்றெதிர் சொல்லி
மல்லுக் கட்டி வழக்கிடு மனைவியும்
காய்ப்புறு தெங்குயா வருக்கை கமுகு
மாதுளை வாழதலை யாதியாம் பயிர்கள்
சூழ்ந்து செழிப்பா யிருப்பினுஞ் சுற்றி
வேயில் லாத மேதகு தோட்டமும்
மினின முலப்பில விளங்கினுந் தண்ணொளி
மேம்படு மதிய மில்லா விசும்பும்
இனிய அட்டாதசக் கறிக ளிருக்கினும்
பசுநெய் யில்லாப் பசப்புள வுண்டியும்
இந்திரச் செல்வ மெய்தினுங் கற்பின்
வழியொழு காப்பெண் வாழ்ந்திடு மனையும்
'அனங்க னனைய' அங்கலட் சணங்கள்
எல்லாம் பொருந்தி யிருப்பினும் வித்தை
கல்லாது விருட கழிந்திடு மைந்தரும்
வயங்குபல் லிளைஞா வைகினும் வயசான்
முதிர்ந்தில் வுலகிய லனைத்தையு முணர்ந்து
காலங் கண்டோ ரிலாவவைக் களமும்
இவைமுத லாக வியம்பிய யாவையும்
இருந்துஞ் சிறப்புரு வன்றியம் பினமே!

தொடுவாயிராச்சியப்பகுதியிலுள்ள சைவாபிமானிகளுக்கு ஓர் விண்ணப்பம்.

நஞ்சுடதேசமாகிய இவ்யாழ்ப்பாணத்திலிருந்து சிங்கப்பூர் முதலிய பிறதேசங்களுக்குச் சென்று உத்தியோகம் வகித்துச் செல்வச்சிறந்தோர்களாய் வசித்துத் தருமமே ஜெபமெனக் கருதி எப்பகுதிகளிலுமுள்ள பாடசாலை, கோயில், மடம், குளம் முதலிய தரும ஸ்தாபனங்களுக்குத் தாங்க ளரிதிலீட்டுந் திரவியங்களிற் சிலபாகங்களை உபகரித்துவருந் தர்மகர்த்தாக்களொவ்வொருவரையும் வதிரித் தேவரையாளிச் சைவவித்தியாசாலைத் தரும கைங்கரியத்தைக் கைக்கொண்டொழுகும் கா. சூரனாகிய அடியேன் பணிந்து கூறும் விண்ணப்பமாவது:

நாங்கள் ஸ்தாபித்து நடாத்திவரும் வதிரி தேவரையாளிச் சைவவித்தியாசாலையைப்பற்றிப் பத்திரிகை மார்க்கமாகவும் பிறவற்றாலும் உங்குள்ள யாவரும் அறிந்திருக்கக்கூடும். அடியேன் கைக்கொண்ட நோக்கத்தை நிறைவேற்றுமாறு உங்கிடங்களிலே வந்து திரவிய சகாயம் பெறுதற்கென்றால், சாதித்தாட்சி அறிமுகமின்மை உத்தியோகமின்மை முதலிய வசதிக்குறைவுகள் பலவுள. அதுபற்றி உங்கிடம் வராது விடப்பட்டது. அன்றி வந்திருப்பேனாகில் தாங்கள் தருமத்துக்குதவும் நிதி அடியேன் போக்குவரவுச் செலவாய் முடியும். ஆகையாற் பின்கூறும் விஷயத்துக்குக் கருணைகூரவேண்டும்.

18—5—25-ல் வெளிவந்த இந்துசாதனம் 87-ம்இலக்கப் பத்திரிகையில் "வதிரி தேவரையாளிச் சைவவித்தியாசாலைத் தரும கைங்கரியம்" என்னும் முகநாமத்துடன் எம்மால் எழுதப்பட்ட கடிதத்தில் ஷைபாடசாலைக்குத் தருமமுதவவேண்டுமென்றும், சிங்கப்பூர் முதலிய இடங்களுக்குத் தபால்மார்க்கமாகத் தரும கைங்கரியப் புத்தகம் அனுப்பப்படுமென்றும், அரசாட்சியாருதவிநன்கொடைப்பணம் ஆசிரியர் வேதனத்துக்குத்தானுங் காணாதெனவுங் காட்டப்பட்டிருந்தது.

ஆகவே இம்முறையும் இப்பத்திரிகை மூலமாக விஷயத்தைஅறிவித்துப் புத்தகங்களையும் அனுப்புகின்றேன். இப்பத்திரிகை வாசிப்பவர்கள் பத்திரிகை எடாதவர்களுக்கும் கைங்கரியப் புத்தகங்கள் ஏற்றுக்கொண்டவர்கள் ஏனையோர்களுக்கும் இந்த விஷயத்தை அறிவித்து உங்கள் தாய்த்தேசமாகிய யாழ்ப்பாணத்தில் அபூர்வமாக அமைக்கப்பட்ட இப்பாடசாலைக்காகப் பொதுநலங் கருதிச் சிரமம்பூண்டுழைத்துச் சேர்த்த திரவியத்தைக் கீழ்காணும் எனது விலாசத்துக்கு அனுப்பிவிடும்படியாக அதிக வணக்கத்துடன் வேண்டுகின்றேன்.

இன்னும் அநாத பிள்ளைகளுக்கு ஆதரவுகொடுத்ததுபோலவும், அன்னையில்லாப் பன்றிக் குட்டிகளுக்கு அரன் பால் சுரந்ததுபோலவும் இப்பாடசாலைக்குத் தாங்கள் அனுப்பும் திரவியம் நல்லுபயமாகுமெனவும் அதனால் ஈஸ்பரன் தங்களுக்குத் தோன்றாத் துணைபுரிவரெனவும் நமஸ்கரிக்கின்றேன்.

இங்ஙனம்,
கா. சூரன்,
வதிரி தேவரையாளி சைவவித்தியாசாலை
கரவெட்டி.

அடைவுநகைவிற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கச்சட்டத்தின்படி லைசென்ஸ்பெற்று அடைவுபிடிக்கும் யாழ்ப்பாணம் வண்-மேற்கு கா. சி. [illegible] முத்துக்கிருஷ்ணநாயுடுவிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி ஷை சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

1924ஆ ஆகஸ்ட்மீ

நம்.	தி.	ரூ.	பெயர் ஊர்	நகைகளின்விபரம்
1137	7	45	கோப்பாய் ச. ஞானம்	பொன் சாதாக்கம்பிப்பூரானட்டியல் 1
1138	7	32	வேலணை ஆ. நாகலிங்கம்	பொன் காதுமணிசோடி 1
1142	7	240	தலையாளி ச. நடராசய்யர்	பொன் டைமன்காப்பு சோடி 1, டைமன் வளையல்க்காப்பு சோடி 1, பூக்காப்புசோடி 1, நீக்கல் மோதிரம் 1, குண்டுவைத்தபிரான்சுக்காசு 1, அவல் மாலை 1, இரண்டுபட்டுடைச்செடிகாரச்சங்கிலி 1, சங்கிலி 1
1145	7	35	பறங்கித்தெரு ஜா. ஜக்கேக	பொன் திருகுசுரையில்லாத கம்பிப்பூரான்.1
1151	9	60	சுதுமலை சி. காசிப்பிள்ளை	பொன் பட்டணங்காப்புசோடி 1
1160	10	12	நல்லூர் வி. ஞானப்பிரகாசம்	பொன் சாதா தோடுசோடி 1, சிறுகைத்தடை 1, வெள்ளி அரைஞாண் 1
அக்டோபர்மீ				
1207	1	60	சுண்டிக்குளி ச. யோசேப்பு	பொன் பழையபட்டணங்காப்புசோடி 1
1213	2	45	வேலணை க. காசிப்பிள்ளை	பொன்கம்பிப்பூரானட்டியல் 1
1214	2	50	வேலணை க. காசிப்பிள்ளை	பொன் பட்டணங்காப்பு சோடி 1
1216	3	70	ஈச்சமோட்டை க. பொன்னையா	பின்கோர்க்கியில் இரண்டுபக்கமும் செப்புக் கட்டைகம்பிவைத்த பொன் சங்கிலிக்கொடி 1
1219	4	70	கரையூர் டே. சந்தியாகுப்பிள்ளை	பொன் பழையபட்டணக்காப்பு சோடி 1
1242	10	50	சுண்டிக்குளி கா. வயிரமுத்து	பொன் பட்டணக்காப்பு சோடி 1
1254	14	40	சுண்டிக்குளி செ. ரெத்தினம்	இமிட்டேஷன் சிவப்புக்கல்வைத்த டிம்பிளுடன் திருகில்லாத பழைய பொன் கம்பிப்பூரானட்டியல் 1

விற்பனவு:—குரோதன ஹூ ஐப்பசிமீ 15௳ (31-10-25) சனிக்கிழமை காலை 10 மணியளவில் எடுபடாதநகைகள் [illegible] வண்.மேற்கு ஷை கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை உடையார்,
வெண்டிஸ்மோசக்.

(Mis 738.)

குமாரபுர க்ஷேத்திரம்.

குகநேசச்செல்வர்களே!

இற்றைக்கு ஆயிரத்துச் சொச்ச வருஷங்களுக்குமுன் குமாரபுரத்தை இராசதானியாக் கிக்கொண்டு வன்னிநாட்டை அரசாண்ட பராராசசேகரமகாராசா காஞ்சிபுரத்தினின்றும் வருவித்த ஊர்மூர்த்தகபிள்ளையென்றும் விக்கினேஸ்வரமூர்த்தியையும் சித்திரவேலர் என்றும் சுப்பிரமணியமூர்த்தியையும்முறையே முல்லைத்தீவைச் சார்ந்த முள்ளியவளையிலும் அதற்கு ஏறக்குறைய இரண்டு மைல் தூரத்திலுள்ள குமாரபுரத்திலும் தாம் விதிப்படி புதிதாகக் கட்டுவித்த கோவில்களிலே பிரதிட்டை பண்ணுவித்தார். இவ்வரலாற்றை வையாபுரிப்பாடலில் காணலாம்.

"ஊர்மூர்த்தி கயிலைவரக்கோவில்தனிலுறையவைத்துக் குண்மையாகச், சீர்பூத்த சந்திரசேகரன்பூசை செய்யவெனச் செப்பி நாளும், ஏர்பூத்த பொற்பணங்க ளருபத்தொன் றியற்று திருப்பூசைக்சென்று, வார்பூத்த முலைமடவார் தங்களோடு பராசசு மன்னன வாழ்ந்தான்."

மேற்காட்டிய சித்திரவேலர் ஆலயமும் அதைச்சேர்ந்த நிலங்களும் நெடுங்காலமாய்த் தேடுவாரின்றிச் சிலமாயழிந்து அரசாட்சியார் பொறுப்பில் ஆயின. இதனைக் கண்டு புத்தூர் வாசரும், பிராமணோத்தமரும், குகநேயச் செல்வருமான காலஞ்சென்ற பிரமஸ்ரீ நா. குமாரசுவாமிக்குருக்களவர்கள் ஸ்ரீ சித்திர வேலாயுதப்பெருமானின் வரப்பிரசாத மகிமையால் பல குகநேயச்செல்வர்களுடைய உதவியோடும் அந்நிலத்தை அரசாட்சியாரிடத்தில் விலைக்கு வாங்கித் திருப்பணியைத் தொடங்கி நடத்தி வந்தார். திருக்கோவிலின் கெர்ப்பக்கிருகமும் அர்த்தமண்டபமும்மடைப்பள்ளியும் நந்தாவனக்கிணறும்ஆகியதிருப்பணிகள் நவமாய்ச்செய்து முடிவுற்றன. சுற்றுமதில் மேற்குப்புறமும் தெற்குப்புறமும் வேலை தொடங்கப்பட்டு முடியுமுன் குருக்களவர்கள் காலமாகிவிட்டனர்.

விக்கினேஸ்வரர் ஆலயத் திருப்பணியை வட்டுக்கோட்டைவாசரும தற்போது கனகராயன் குளத்தில் இஞ்சினீராக விருப்பவருமாகிய ஸ்ரீ அ. இராசகாரியர் அவர்கள் தமதுபொறுப்பில் வியாளவரிவரையில்முடித்திருக்கின்றனர். மேற்படி ஆலயத்தின் எஞ்சிய திருப்பணியையும நிறைவேற்றிவைக்க எம்பெருமான் அவருக்குத் திருவருள் புரியவேண்டுமென்பதே எம் கோரிக்கை.

"மகன் றந்தைக்காற்றுமுதவி யிவன்றந்தை என்னோற்றான் கொல்லெனுஞ்சொல்" என்னும் பொய்யில் புலவர்பெருமானின் வாக்கை திருப்பிக்கக் காலஞ்சென்ற பிரமஸ்ரீ குமாரசுவாமிக்குருக்களவர்களின் பெருந்தவப்புதல்வர்களாகிய பிரமஸ்ரீ நா. கு. பரமசாமிக்குருக்கள்அவர்களும் பிரமஸ்ரீ நா. கு. பஞ்சாட்சரக் குருக்கள் அவர்களும் தமதுதந்தையார் தொடங்கிய சற்கருமத்திற் றலைப்பட்டுச் சிரமம்பாராது உழைத்துவருகின்றனர். தற்போது ஆலயத்தில் வேற் பிரதிஷ்டை செய்யப்பட்டு நித்தியபூசை நடைபெறுகின்றது.

கோயிற் திருப்பணியைச் செவ்வனே நிறைவேற்றவேண்டுமென்று கங்கணங்கட்டிநிற்கும் இரு பால பிராமணோத்தமர்களுக்கும் கூடிய பொருளுதவிசெய்து அவர்களுடன் ஊக்கப்படுத்துவது சைவசமயிகளெல்லாருடைய கடமையாம்.

"மாதவர்மடங்களாதி வரதன்மந்திரங்களாதி, காதமா மிலிங்கமாதி கனிபுட் கரணியாதி, சேதமுற்றிடின் முன்போலச் செய்விப்போர்க் குறுபலந்தா, னோதமுன் செய்தோர்தம்மி லாயிரங் குணிதமோங்கும்."

இங்ஙனம்,
சி. சபாபதிப்பிள்ளை.

தபாற்கந்தோர் முல்லைத்தீவு.
18—10—25.

தேக்கமரம்.

புதிதாக வருவிக்கப்பெற்ற திறமான தேக்கமரங்கள். நீழம் 6 அடிதொடக்கம் 30 அடிவரையிலுள்ளன, கனம் 10 அங்குலம் தொடக்கம் 20 அங்குலம்வரையி லுள்ளன. நீண்ட மரங்கள் குறைவாயிருப்பதினால், எம்மிடம் வழக்கமாயெடுப்பவர்கள் தங்கள் ஆடர்களை ஏற்கனவே செய்துகொள்ளவேண்டியது.

S. வீரகத்திப்பிள்ளை,
தொண்டமானாறு,

தந்திவிலாசம்
ஸ பி. வல்லுவெட்டித்துறை.

(H. 37.)

சேலம் ஜவுளிதினிசுகள்.

எங்களிடம் சொந்தத் தறிகளில் செய்யப்பட்ட பட்டுத்தினிசுகளும், பட்டும் பருத்தியும் கலந்த தினிசுகளும், தாளம்பூக்கரைப் புடைவைகளும், வெள்ளை ஜவுளி தினிசுகள், குண்டஞ்சு, சன்னஞ்சு, பவுன்பேட்டு, இன்னும் பல மாதிரிகள் இருக்கிறது. விலாசம்தெரிவித்தால் பிறைஸ் லீஸ்ட் இலவசமாய் அனுப்புகிறோம்.

விலாசம்:

கோ. ப. சி. அ. வேணுகோபால்செட்டியார்
அண்ட் பிறதர்ஸ்,
ஜவுளி & கமிஷன் ஏஜண்டு,
குகை, சேலம், S. I.

தந்தி விலாசம்:
வேணுகோபால்,
சேலம்.

(H. 32.)

☞ "சேலம் பனியன்கள்."

உறுதியானது விலைசரசம்.
நாட்பட உழைக்கக்கூடியது,
வியாபாரிகளுக்குத் தக்க கமிஷன் கொடுக்கப்படும்.
தேவைக்கு அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

ருயல் நிட்டிங் பேக்டரி,
செவ்வாய்பேட்டை, சேலம்,
S. இந்தியா.

(H. 40.)

புதிய தினுசுகள் சகாய விலைகள்

நூதனமான பட்டு ஜவுளிகள்.

எங்களிடம் தற்காலம் நாகரிகத்திற்கேற்ற பனாரிஸ், பெங்களூர், சேலம், கோயம்புத்தூர், கொர்னாடு, காஞ்சீபுரம், கும்பகோணம், தஞ்சாவூர், பாடிப்பேட்டை, பட்டணம், பாரிஸ் பட்டு முதலிய தினுசுகளில் சுத்தமானபட்டுச்சேலைகளும் ஜரிகைநூல் சேலைகளும், பட்டுச்சரிகைச் சால்வைகளும் தினுசுகளும் தயாராயிருக்கிறது.

ஒருதடவை வாங்கிப் பார்த்தால் அதின் நயம் தெரியும். வெளியூர் ஆடர்கள் வி. பி. மூலமாக அனுப்பப்படும்.

பி. ஆர். அனந்தநாராயணய்யர்,
ஜவுளி வியாபாரம்,
205, செட்டித்தெரு,
கொழும்பு.

P. R. Ananthanarayana Iyer,
Silk & Cloth Merchant,
205, Sea Street,
COLOMBO.

Y. 39).

ஆப்ரேஷன் இல்லாமலே சுலபமாய் நிவர்த்தியாய்விட்டது.

கேஸரியின் விலையுயர்ந்த ஔஷதங்களின் குணத்தை மிகவும் மெச்சினேன் 'லோத்ரா'வைப்பற்றி என் அனுபவத்தைக்கீழேகுறிப்பிடுகின்றேன். அதற்குச்சமமான ஔஷதம் பூலோகத்தில் வேறொன்றுமில்லையென்று திண்ணமாய்க் கூறுவேன். என்மனைவிக்கு வயிற்றில் இடதுபாகத்தில் ஒருவிதமான வலி இருந்துவந்தது மேனாட்டு (இங்கிலீஷ்) வைத்தியம் எல்லாம் பிரயத்தனப்பட்டுக் குணமடையவில்லை. பின் ராஜமந்திரி ஆஸ்பத்திரிக்கு அழைத்துப்போனதில் உடனே கர்ப்பபையில் சாஸ்திர சிகிச்சைசெய்யவேண்டுமென்றுர்கள். இது என் மனைவிக்குச் சம்மதமில்லாததால் பெருங்கஷ்டத்துடன் ஊர வந்துசேரும் தருணத்தில் வரப்பிரசாதிபோல் "லோத்ரா" ஞியாபகத்திற்கு வந்ததால் சென்னைக்கு ஆபரேஷனுக்கு வருமுன் இதை உபயோகித்துப் பார்க்க எண்ணங் கொண்டவனாய் தந்திமூலமாய் ஆடர் கொடுத்து ஔஷதத்தை தருவித்துக்கொண்டு முதல்வேளை மருந்து கொடுத்த மாத்திரத்திலேயே குணம் காண ஆரம்பித்தது இரண்டாம் வேளை மருந்து கொடுத்தவுடன் 8-மணிநேரம் நல்ல நித்திரைசெய்தாள். மறுபடி மூன்றும்வேளை மருந்து மறுநாள் கொடுத்த மாத்திரத்தில் வலியெல்லாம் நின்றுவிட்டது. நாளுக்கு நாள் சுகமடைந்து வந்தாள். சத்தியமாய் "லோத்திரா" வினுல் ஆபரேஷனில் தான் நிவர்த்தியாக வேணுமென்று இங்கிலீஷ் டாக்டர்கள் சொன்னவியாதி ஆபரேஷன் இல்லாமலே சுலபமாய் நிவர்த்தியாய் விட்டது என்று காக்கினாட, கோதாவரி டிஸ்டிரிக்டு போர்ட் இஞ்சினியர் ஆபீஸ், மகா-ா-ா-ஸ்ரீ பி. சுப்பராயுடு அவர்கள் எழுதுகிறார்.

இந்த ஔஷதத்தைப் பற்றிய புத்தகத்திற்கு உடனே எழுதுங்கள்.

"கேசரி குடீரம்"
ஆயுர்வேத ஔஷதசாலை,
எழும்பூர், மதராஸ்.

(Y. 35. B.)

அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக்கட்டளைச் சட்டத்தின்படி லைசென்சு பெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் வண்ணிழக்கு மு. ரு ம. மு. சேவுகஞ்செட்டியாரிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி ஷை சட்டத்தின் 12 ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

1924ஆ செப்டெம்பர்மூ.

நம.	வ.	ரூபா.	ஊர் பெயர் நகைகளின்விபரம்.
27	13	80	வண்ணிழக்கு கந்தர் ஆறுமுகம் பொன் பட்டணங்காப்புச் சோடி 1
38	16	30	சுன்னுகம் முத்துக்குமாரு சின்னத்துரை பொன் திருகில்லாத தாலிக்கொடி 1
39	16	55	கோப்பாய் பண்டாரி பொன்னு பொன் பட்டணங்காப்புச் சோடி 1
49	17	27	கரையூர் அந்தோனி யோசேப்பு பொன் இமிட்சிகப்புக்கல்வைத்த கவுந்தோர் 1
54	17	55	வண்ணிழக்கு சின்னத்தம்பி கந்தையா பொன் பட்டணங்காப்புச் சோடி 1
55	17	7	கரையூர் வயிரமுத்து அந்தோனிப்பிள்ளை பொன் கவுந்தோர் 1
56	18	130	கொக்குவில்கிழக்கு சின்னத்தம்பி பூபாலரத்தினம் பொன்சங்கிலிக்கொடி 1
69	18	35	சோனகதெரு முகமது லாஞமுத்து பொன் பழுது சவடிக்கொடி 1
94	22	60	நாவற்குளி ஆறுமுகம் கந்தையா பொன் பீலிக்காப்புச் சோடி 1
101	23	60	சண்டிக்குளி ந. ஆறுமுகம் சிவக்கொழுந்து பொன் தாயித்துக்கோர்த்த குண்டுச் சங்கிலி 1
108	24	125	சண்டிக்குளி ஆறுமுகம் சிவக்கொழுந்து பொன் சங்கிலிக்கொடி 1
113	24	61	பறங்கித்தெரு யாக்கோபு ஞானமுத்து பொன் திருகில்லாத சங்கிலிக்கொடி 1 இமிட் தோடு சோடி 1
119	25	50	வண்ணார்பண்ணை நாகமணி நாகமுத்து பொன் பீலிக்காப்புச் சோடி 1
136	28	55	கோப்பாய் நல்லதம்பி முத்து பொன் பழுது பட்டணங்காப்புச்சோடி 1
அக்டோபர்மீ.			
153	1	50	தாவடி செல்லையா சின்னையா பொன் கம்பிப்பூரானட்டியல் 1
172	5	6	பேரலீஸ்லயின் கே. ஏ. வில்மட் பொன் காசு 1
201	9	22	செட்டித்தெரு முதலித்தம்பி கணபதிப்பிள்ளை பொன் குண்டுச்சங்கிலி 1
211	11	60	கொழும்புத்துறை நாகர் சாமிவேலு பொன் முகப்பில்லாத தாலிக்கொடி 1
225	13	50	வண்ணிழக்கு க. தம்பு கந்தையா பொன் முகப்புடன் கொலுசுக்காப்புச் சோடி1
242	15	65	சண்டிக்குளி கதிரேசு நாகலிங்கம் பொன் பட்டணங் காப்புச்சோடி 1

விற்பனவு:—குரோதனஞு ஐப்பசிமீ 15உ (31-10-25) சனிக்கிழமை காலை 10 மணியளவில் எடுபட்டநகை புறநீங்கலாக மிகுதி ஷை கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

அரு. செல்லையா உடையார்,
வெந்திஸ்மேஸ்தர்.

(Mis 736)

ஒரு சாதாரண பொருளே.

நோவுக்கான தைலத்தில் சுகந்தம்தேடமாட்டீர். அநேகமாய்ச் சுகந்தம் உண்டாக்குவதில் நோவை நீக்குங்குணம் மறைந்துவிடுகிறது.

லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம்

செய்வதில் சுகந்தமே வேண்டுமென்று எதுவுஞ் சேர்க்கவில்லை நோவைக் குணமாக்குஞ் சரக்குகளில் அவைகளின் குணத்தை விலக்கவில்லை. 12 திறமான சரக்குகள் சேர்ந்து அதி உயர்ந்த குணங்கள் வாய்ந்த தைலமே லிட்டில்ஸ் ஓறியண்டல் பாம். அதனால் அது உடனே கீல்வாயு, தொடைக்குடைச்சல், இடுப்பு வலி, பாரிச வாய்வு, வாதரோகம், மண்டையிடிப்பு முதலிய நோவுகளைத் திடமாய்க் குணப்படுத்துகிறது.

4—1—25.



(Y. 41. B.)

ஹிஸ்டிரியா என்னும் மூர்ச்சைவியாதி நிவர்த்தியாயிற்று

என்று திருவானைக்காவல் சீதாராமய்யரவர்கள் பின்வருமாறு சென்னைக் கேஸரி குடீரம் கம்பனியாருக்கு எழுதினார்.

4-வருஷகாலமாய் அடிக்கடி (பஹிஷ்டை காலத்தில் வரும் ஹிஸ்டிரியா) மூர்ச்சைவியாதியால் வெகு ஆபத்தாய்ப்படுத்திருந்த என் பாரியாளுக்கு உம்மிடமிருந்து தருவித்த "லோத்ராவி"னுபயோகத்தால் சம்பூரணகுண முண்டாயிற்று.

"கேஸரி குடீரம்"
ஆயுர்வேத ஔஷதசாலை,
எழும்பூர், மதராஸ்.

(Y. 35. A)

அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்சு பெற்று அடைவு பிடிக்கும் திருகோணமலை கானக்கடைவீதி க. தம்பிப்பிள்ளை, வைத்திலிங்கம் என்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி ஷை சட்டத்தின் 12-ம்பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்பட வேண்டிய நகைகளின் விபரம்.

1923-ம்ஆ IIமீ

நம்.	வ.	ரூபா	சத.	நகைகளின் விபரம்.
h386	5	19		வெ. பழைய பாதசரம்சோ 1 ச. வி. பழு.
387	6	12		தோடு சோடி 1 நசி.
453	16	9		மணிக்கோர்வை 1-ல் மணி39 பி. இ. உடை.
463	18	6	50	பொன் தோடுசோடி 1 பழு.
466	18	16		வெ. கொலுசு சோடி 1
12-ம் மீ				
562	5	35		பொன் தாலிக்கொடி 1 பழுது ச 1 இ.
606	15	18		பொற்பத சவுக்கமணிக்கோ. 1-ல் மணி 30 பழுது
638	21	30		கொப்புச்சிமிக்கி சோ.13நால் மணியட்டியல் 1 பழு சிறு மணிக்கோர்வை 1 ல் மணி 21,பி.இ.பழு வெ தண்டை சோடி 1 ச 1இ.பழு
641	22	6		சிறு செருகுதோடு சோ 1பழு
656	25	6		வெ அரைஞாண் 1 பழு.
575	28	10		சவுக்கமணிக்கோ. 1-ல் மணி 25 பழு.
698	31	10	50	பொன் பெட்டிமோதிரம் 1 பழு. சிறு அரசுதப்பூ சோடி 1 பழுது
1924ஆ 1-ம்மீ				
790	19	12		வெ. பாதசரம் சோடி 1
801	21	13		தோடு சோடி 1 பழுது
2-ம்மீ				
880	11	15		வெ.பழை.பாதசரம் சோடி 1 ச. வி. பழு.
898	17	10		இமிற்கல்மோதிரம் 1
921	22	6		சிறுமணிக்கோர்வை 1ல் மணி 14 உடன் பாசிமணி பழு. சிறுபடச்சூர் 1 பழுது
3-ம்மீ				
951	3	6		வெ. கறளைசேர். 1
4-ம்மீ				
1061	12	10		பொன்காப்பு 1
1074	19	45		பதக்கம்பிப்பூரானட்டியல்1பத, பழுது
1076	19	6		சிறு கொப்புச்சிமிக்கிசோடி 1 மு இ
1094	23	7		வெ. அரைஞாண் 1 பழுது
1101	24	11		தங்கமோதிரம் 1
1109	27	6		மெழுகுகுவளை சோடி 1
1110	27	28		கைச்சங்கிலி 1
5-ம் மீ				
1124	3	20		சப்புஞுதவளையல் 1
1147	8	65		கொலுசுக்காப்புசோடி 1
1196	20	22		கைச்சங்கிலி 1
1222	24	6		தோடு சோடி 1 பழுது
6-ம்மீ				
1269	6	7		தோடுசோடி 1 பழுது
1337	20	12		பலவித சவுக்கு மணிக்கோர்வை 1ல் மணி 34 பழுது
1382	27	6		இமிற் தோடு 1 ச. இ. பழுது
1388	28	65		4 பவுண்சங்கிலி 1 பவுண் 2
7-ம்மீ				
1422	7	14		சவுக்கமணிக்கோர்வை 1 மணி 19 உடை
8-ம்மீ				
i4	1	7		மணிக்கோர் 1 ல் மணி 34 பி. இ. நசி. கூரவாளி சோ 1 பழுது
6	2	15		பொன்சங்கிலி 1 பி. இ பழுது
41	10	6		மணிக்கோ 1ல் மணி 27 பி.இ. உடை பழுது
66	17	55		தாலிக்கொடி 1 பழுது

விற்பனவு:—குரோதனஞு ஐப்பசிமீ 26உ (11-11-25) புதன்கிழமை காலை 9மணிதொடக்கம் எடுபட்டநகைபிற நீங்கலாக மிகுதி ஷை கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

க. கதிர்காமத்தம்பி,
வெந்திஸ்மேஸ்தர்.
21—10—25.

(Mis. 737.)

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ்சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவ நீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by Pandit V. T. Sambandhan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.